08.02.2024

**HMOP. No. 83 / 2023 எ.ம.சா.1 மீனாள் , க/பெ. ராமனாதன்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

நாங்கள் 6 வருடங்களாக பிரிந்துள்ளோம். திருமணம் நடந்து 2 மாதத்திலேயே எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். நான் திருமயம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. மனுதாரர் ராமனாதன் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்களது திருமணம் குறுகிய காலத்தில் பேசி முடிக்கப்பட்டு நடந்தது என்றால் 6 மாதம் ஆகியது. மனுதாரர் ராமனாதனின் சகோதரர் சுந்தரத்திற்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு திருமண தேதி முடிவு செய்யப்பட்ட பிறகு தான் இடைப்பட்ட காலத்தில் எங்களது திருமணம் பேசி முடிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த சுந்தரத்தின் திருமணத்தின் முன்பே எங்கள் திருமணம் நடந்தாகிவிட்டது என்றால் சரிதான். 26.11.2017 அன்று நடந்ததாக சொல்லும் குற்ற சம்பவம் தொடர்பாக மனுதாரர் ராமனாதனின் தகப்பனார் மாணிக்கம் கொடுத்த புகாரின் பேரில் நாங்கள் முன்ஜாமீன் எடுக்க வழக்கறிஞரை சந்தித்தோம் என்றால் அவர்கள்தான் பிரச்சனை செய்துவிட்டு முன்னதாக காவல் நிலையம் சென்றனர், முன்ஜாமீனுக்காக நாங்கள் வழக்கறிஞரை பார்த்தோம். வழக்கறிஞரை பார்த்த பிறகு நானும் ஒரு புகாரை அதே காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் கொடுத்த புகாரின் தேதி 01.12.2017 என்றால் சரிதான். மனுதாரர் ராமனாதனின் தகப்பனார் மாணிக்கம் கொடுத்த புகாரிலிருந்து நாங்கள் தப்பிப்பதற்காக நாங்கள் ஆலோசனை செய்து இந்த மனுதாரர் ராமனாதனின் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் எதிராக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வளைகாப்பு நடத்தப்பட்டதா என்றால் இல்லை. சேர்ந்து வாழ வேண்டும் என்று சட்டப்படியான நடவடிக்கை எதுவும் தனிப்பட்ட முறையில் நான் எடுக்கவில்லை என்றால் எடுத்துள்ளேன், சேர்ந்து வாழ வேண்டும் என்று நீதிமன்றத்தில் நான் தனிப்பட்ட முறையில் வழக்கு போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். அதன் வழக்கு எண் தெரியுமா என்றால் வழக்கறிஞரிடம் கேட்க வேண்டும். அந்த வழக்கிற்கு நான் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 7 வது பத்தியில் என் சகோதரரை துபாய்க்கு அனுப்பி வைப்பதற்காக மனுதாரரிடம் அனுமதி கேட்டு 1 நாள் என் பெற்றோர் வீட்டுக்கு சென்றுவிட்டு 26.11.2017 அன்று கணவர் வீட்டிற்கு

திரும்பியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது எதிர் உரைக்கு வழக்கறிஞருக்கு விவரங்களை நான்தான் சொன்னேன். நான் கொடுத்த காவல் நிலைய புகாரின்பேரில் பதியப்பட்ட ம.சா.ஆ 7 முதல் தகவல் அறிக்கையில் எனது கணவரால் மனஸ்தாபம் ஏற்பட்டு என் தாயார் வீட்டில் கடந்த 2 நாட்களாக இருந்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் , என் தம்பி ஊருக்கு போவதற்காக நான் சென்றிருந்தேன். மேற்கண்ட 2 கூற்றில் ம.சா.ஆ 7 முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளது பொய்யா என்றால் பொய்தான். ம.சா.ஆ 7 ஆவணத்தில் கூறியுள்ளபடி நான் மனஸ்தாபம் ஏற்பட்டு செல்லவில்லை என்றால் சரிதான். நான் 01.12.2017 அன்று கொடுத்த புகாரானது 26.11.2017 அன்று நடந்ததாக சொல்லும் சம்பவத்திற்காக கொடுத்த புகார் என்றால் சரிதான். நான் புகாரில் கூறியுள்ளவாறு எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை, நான் மனுதாரர் மற்றும் மனுதாரரின் குடும்ப உறுப்பினர்கள் ஐவருக்கு எதிராக ஒரு பொய்யான புகாரைக் கொடுத்து மனுதாரருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் நோக்கில் செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல, பொய்யான புகார் கொடுக்கவில்லை. திருமணத்தில் போது நான் அணிந்து வந்து நகைகள் என்னிடம்தான் உள்ளது என்றால் இல்லை, அவர்களிடம்தான் உள்ளது. நான் முன் ஏற்பாட்டுடன் மனுதாரரைவிட்டு பிரியும் நோக்ககத்தில் என் உடைமைகளை நான் எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன் என்றால் இல்லை. நான் கருத்தரித்த விவரத்தினை கூட மனுதாரருக்கு தெரிவிக்கவில்லை என்றால் அவர்கள் வீட்டில் எல்லோருக்கும் நன்றாக தெரியும். 26.11.2017 அன்று நடந்த சம்பவத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு மாணிக்கம் தொடர் சிகிச்சையில் இருந்து வந்தார் என்றால் அவரே ஏற்படுத்திக்கொண்டார், மாணிக்கம் மருத்துவமனையில் சிசிகிச்சையில் இருந்த விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரார், மனுதாரரின் தகப்பனார் மாணிக்கம் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை எனது சகோதரியின் கணவர் மல்லிக்கண்ணு, எங்களது உறவினர் மாறன் மற்றும் ராமலிங்கம் ஆகியோர்கள் கொலைவெறித் தாக்குதல்கள் நடத்தினார்கள் என்றாலும், அது தொடர்பாக மாணிக்கம் கொடுத்த புகாரில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு, குற்றப் பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை , என் அம்மா, அக்கா மட்டுதான் வந்தார்கள். இந்த திருமணத்திற்கு எனது விருப்பமில்லாமல் என் தாயாரின் கட்டாயத்தின்பேரில் மனுதாரரை திருமணம் செய்து கொண்டேன் என்றால் இல்லை, எனது முழு சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டேன். எங்கள் திருமணம் நடந்த பிறகு நான் மனுதாரரை ஏளனமாக பேசினேன் என்றால் இல்லை, மனுதாரரும், அவரது அம்மா, அக்கா நான் படிக்கவில்லை, வசதியில்லை என்று என்னைத்தான் ஏளனமாக பேசுவார்கள். எனக்கு மனுதாரரை பிடிக்கவில்லை என்றும், அவருடன் வாழ விருப்பமில்லை என்றும் நான் வெளிப்படையாகவே மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தாரிடம்

சொல்லி வந்தேன் என்றால் நான் ஒருநாளும் அவ்வாறு சொல்லியதில்லை. அதனால தான் நான் சேர்ந்து வாழ வேண்டும் என்று தனிப்பட்ட நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும், மனுதாரர் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் மனுதாரர் குடும்பத்திற்கு என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்று தேடி ஆவணங்கள் எடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதனை நான் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொத்து கொடுத்தால்தான் இந்த விவாகரத்திற்கு சம்மதிப்பேன் என்று பொய் கட்சி செய்து வருகிறேன் என்றால் அபாண்டமான பொய். நான் மனுதாரருக்கு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் கொடுமைகள் செய்துள்ளேன் என்றால் இல்லை, அவர்கள்தான் எனக்கு கொடுமைகள் செய்து 2 மாதத்தில் அனுப்பிவிட்டார்கள். எனக்கு உண்மையில் மனுதாருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்றால் சரியல்ல, விருப்பமுள்ளது.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது, மறு விசாரணை இல்லை.**